


தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் பாராளுமன்றில் நேற்றைய தினம் ஆற்றிய உரை



"இன்றைக்கு நாங்கள் ஒரு பேச்சுவார்த்தையிலே ஈடுபட ஆரம்பித்திருக்கிறோம். ஜனாதிபதி அவர்கள் நவம்பர் மாதம் வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாத முதலாம் நாள் நான் உரையாற்றிக் கொண்டிருந்தபோது இந்த விடயத்தைப்பற்றி எழுந்து பேசி மற்ற கட்சித் தலைவர்களோடு கலந்தாலோசித்து. வரவு செலவு திட்ட விவாதம் முடிவடைந்தவுடனேயே நாங்கள் சந்திக்கலாம் என்று சொல்லி சர்வ கட்சி மாநாடொன்றை டிசம்பர் 13ம் திகதி ஆரம்பித்து வைத்தார். அதிலே பலரும் இதனைத் தீர்க்கவேண்டும். தமிழ் தேசிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வரவேண்டும். உடனடி பிரச்சினைகளுக்கு தீர்வு வரவேண்டும் என பல முற்போக்கான கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக நீதி அமைச்சர் பிரதான பங்கு வகிக்கிறார்.

இன்றைக்கு சிறையிலே தொடர்ச்சியாக பல காலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிற தமிழ் கைதிகளின் விடுதலை. அதிலே முக்கியமானதொன்று. காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதி இன்னொன்று. எங்களுடைய நிலங்கள் தொடர்ந்து அபகரிக்கப்படுவது மிகவும் பிரதானமான ஒரு விடயம்.

ஆகவே நல்லிணக்கத்தை நாங்கள் ஒரு அரசியல் தீர்வு மூலமாக அடையலாமா இல்லையா என்பதை பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னர் தெரிந்துகொள்ள வேண்டும். அதை நான் நாட்டுக்கும் உலகத்திற்கும் அறிவிக்கப்போகிறேன் என்று ஜனாதிபதி சொல்லுவதிலே நங்கள் இந்த விடயங்கள் முதலிலே தீர்க்கப்படவேண்டும். ஆனால் அதே வேளையிலே இறுதித் தீர்வு என்ன என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையாக நாங்கள் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். இன்று பின்னேரமும் ஒரு ஆயத்த கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

நாங்கள் அதற்குப் பிறகு 10ம் திகதியிலிருந்து பேச்சுவார்த்தையினை நடாத்தவிருக்கிறோம். இந்த வேளையிலே. எங்களுடைய கட்சியின் சார்பாகசிலமுக்கியமானவிடயங்களை நான் முன்வைக்க விரும்புகிறேன். நாங்கள் தொடர்ச்சியாக. ஒரு அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வைக் கோரி நிற்கின்றோம். அர்த்தமில்லாத அதிகாரப்பகிர்வு எவருக்கும் தேவையில்லை. அர்த்தமில்லாதிருந்தால் அது அதிகார பகிர்வே கிடையாது. ஆகவே அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு. ஒரு சமஷ்டி கட்டமைப்பினால் மட்டும்தான் முடியும் என்பதை திரட்டவட்டமாக நாங்கள் சொல்லுகிறோம். அதை சொல்லிக்கொண்டிருக்கும் போது தான் இதை தீர்க்க முடியும் என்று ஜனாதிபதி நம்பிக்கையோடு வெளிப்படுத்தியிருக்கிறார். அதைச் சொல்லுகிறார். அதற்கான காலக் கெடுவையும் அவரே தீர்மானித்திருக்கிறார். வருகிற மாதம் 4ம் திகதிக்கு முன்னர் இது செய்யப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். நாங்கள் அந்தக் காலக் கெடுவுக்கு இணங்கியிருக்கின்றோம். ஏனென்றால் இது சம்பந்தமாக 35 வருடமாக பேசி பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பல இணக்கப்பாடுகள் ஈட்டப்பட்டிருக்கின்றன. அதை நடைமுறைப்படுத்துவதே தேவையானது தவிர புதிதாக நாங்கள் ஆரம்பத்திலேயிருந்து தொடங்கவேண்டியதில்லை.

ஆகவே. திரும்பவும் இந்த வருட ஆரம்பத்திலே இந்த பேச்சுவார்த்தையில் இன்றைக்கும் சென்று அதற்கான ஆயத்தங்களை செய்கிற வேளையிலே எங்களுடைய நிலைப்பாட்டை நாட்டுக்கும் உலகத்துக்கும்நான்சொல்லவிரும்புவது என்னவென்றால். இந்தக் கால கெடுவுக்குள்ளே இது முடிய வேண்டும். அது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும் ஆனால் நிச்சயமாக தமிழ் தேசிய பிரச்சினை தீருகிறது என்று சொல்கின்ற போது தமிழ் மக்களுடைய நியாயமான அபிலாஷை அதனாலே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

இல்லையென்று சொன்னால் இது காலத்தை இழுத்தடிக்கும் ஒரு செயற்பாடாக இருக்குமென்று சொன்னால். எங்களுக்கு பலத்த சந்தேகங்கள் இருக்கின்றன. சந்தேகங்களோடுதான் நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருகிறோம் என்பதையும் திரும்பத்திரும்ப நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

சந்தேகத்தோடுதான் வருகிறோம். ஏனென்றால் பல தடவைகள் இப்படியான முயற்சிகள் எடுக்கப்பட்டு எதுவுமே முடிவடையாத ஒரு நிலையிலே பேச்சுவார்த்தைக்கு நாங்கள் வர மறுத்தோம் என்ற ஒரு பழிச் சொல் எங்களுக்கு வரக்கூடாது என்பதற்காக நாங்கள் இதயபூர்வமாக இதய சுத்தியோடு நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருகிறோம் எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாகசொல்லியிருக்கிறோம். ஆனால் அதனைசெய்யத்தவறுமாகஇருந்தால். அதனுடைய முழுப் பொறுப்பையும் அரசாங்கம் தான் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்தக் காலக்கெடுவுக்குள்ளே இது செய்யப்படாவிட்டால் நாங்கள் அடுத்தடுத்த நடவடிக்கைகள் குறித்து வெளிப்படுத்துவோம். இந்த கால கெடுவுக்குள் இதனை செய்து முடிக்க இயலாது என்று தெரிந்துகொண்டே எங்களை ஏமாற்றுகிற நாடகத்தினை அரசாங்கம் அரங்கேற்றுகிறது என்று பலர் எங்களுக்கு எச்சரிக்கிறார்கள். அப்படியாக இருக்கவும் கூடும். ஆனால் ஒரு சிறிய காலக்கெடு. இந்த சிறிய காலக்கெடுவில் அது எமக்கு தெரியவரும். அப்படியாக ஒரு செயற்பாடாக இது இருக்குமாக இருந்தால். நாட்டினுடையதும் சர்வதேசத்தினுடையதும் கண்களிலே மண்ணைத் தூவுகிறமாதிரியான ஒரு செயற்பாடாக அரசாங்கம் இதைச் செய்யுமாக இருந்தால். அது தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தப்படும். அதனை உலகத்திற்கு நாங்கள் பறை சாற்றுவோம். உலகத்திற்கு சொல்லுகிறது மட்டுமல்ல. நாட்டிலேயே எங்களுடைய மக்களை அணி திரட்டி. எங்களுடைய நியாயமான அரசியல் சுதந்திரத்திற்காக நாங்கள் வெவ்வேறு வழிகளில் போராட்டங்களை முன்னெடுப்போம். இது ஜனாதிபதி கொடுத்த காலக்கெடுவுக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக விடுக்கப்படுகிற எச்சரிக்கையாகக் கூட அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம் என தனதுரையில் தெரிவித்தார்.

## நாட்டின் பல இடங்களில் மழை

*வடக்கு. வடமத்திய. கிழக்கு. ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.*

*திருகோணமலை. முல்லைத்தீவு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.*

*நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.*

*இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.*

*மழை நிலைமை : காங்கேசந்துறையில் இருந்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.*

*நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.*

*நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையில் இருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

*திருகோணமலையில் இருந்து காங்கேசந்துறை மற்றும் மன்னார் ஊடாக சிலாபம் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.*

*கடல் நிலை : திருகோணமலையில் இருந்து காங்கேசந்துறை மற்றும் மன்னார் ஊடாக சிலாபம் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.*

*நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.*

*இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற் பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும். (வளிமண்டலவியல் திணைக்களம்)*

# 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அதிரடி வெற்றி




இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி20 போட்டி நேற்று இடம்பெற்றது. போட்டியின் நாணய சுழற்சியை வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 206 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இலங்கை அணி சார்ப்பில் அணித் தலைவர் தசுன் சானக ஆட்டமிழக்காமல் 56, குசல் மென்டிஸ் 52 ஓட்டங்களையும், சரித் அசலங்க 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் உம்ரான் மலிக் 3 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்.

இந்திய அணிக்கு207ஓட்டங்கள்வெற்றியிலக்காகநிர்ணயிக்கப்பட்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 190 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இந்திய அணி சார்பில் அக்ஷர் பட்டேல் 65 ஓட்டங்களையும் சூர்யகுமார் யாதவ் 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் தசுன் சானக, கசுன் ராஜித மற்றும் தில்ஷான் மதுசங்க ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தியிருந்தனர். அதனடிப்படையில் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்று தொடரை சமப்படுத்தியுள்ளது.

# கிழக்கின் கேடயம் பிரதானியின் ஒருங்கமைப்பில் புதிய அரசியல் கூட்டணி உருவாகிறது

(நூருல் ஹுதா உமர்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டு எதிர்வரும் வாரத்தில் வேட்புமனுவை கோரியுள்ளது. இதனை அடிப்படையாக கொண்டு பல்வேறு அரசியல் கட்சிகளும், அரசியல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிவில் அமைப்புக்களும் தேர்தல் கூட்டுக்களையும், அரசியல் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மும்முரமாக மேற்கொண்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக அரசியலில் அடிப்படையிலிருந்து மாற்றத்தை உருவாக்கும் நோக்கில் கிழக்கின் கேடயம் பிரதானியின் புதிய அரசியல் கூட்டணி ஒன்றினை உருவாக்கி கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தேர்தலில் போட்டியிடும் வேலைகளை ஆரம்பித்துள்ளது. அதனடிப்படையில் கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம்.சபீஸின் புதிய அரசியல் கூட்டணி ஒன்றினை உருவாக்கும் முயற்சிக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பச்சைக்கொடி காட்டியுள்ளதாகவும், ஏனைய சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும் அறிய முடிகிறது.

அண்மைக்காலத்தில் அம்பாறை மாவட்டம் தாண்டி கிழக்கு மாகாணம் முழுவதும் சிறுபான்மை மக்களின் தேவைகளை முன்னிறுத்தி எஸ்.எம்.சபீஸ் தலைமையிலான கிழக்கின் கேடயத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது. இதை மையமாக கொண்டு கல்விமான்கள், இளைஞர்கள் அடங்கிய குழுவினர் இந்த புதிய அரசியல் கூட்டணியில் எதிர்வரும் தேர்தல்களில் களமிறங்க தயாராகி வருகின்றனர்.



# 18,000 ஊழியர்கள் பணி நீக்கம்

ஒன்லைன் சில்லறை வணிகத்தில் ஈடுபட்டு வரும் அமேசான் நிறுவனம் 18,000க்கும் மேற்பட்ட ஊழியர்களை பணிநீக்கம் செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது. அமேசான் நிறுவனமானது 18,000 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய உள்ளதாக தலைமை நிர்வாகி ஆண்டி ஜாஸ்ஸி அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். அதில் பணிநீக்கங்கள் பெரும்பாலும் நிறுவனத்தின் இ-கொமர்ஸ் மற்றும் மனித வள அமைப்புகளை பாதிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில், ஜனவரி 18 முதல் பணிநீக்கம் செய்யப்படும் ஊழியர்களை நிறுவனம் தொடர்புகொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 300,000 பேர் கொண்ட கார்ப்பரேட் பணியாளர்களில் இது 6 சதவீதம். நிச்சயமற்ற பொருளாதாரத்தை நோக்கி நாம் சென்று கொண்டு இருக்கையில் கடந்த பல ஆண்டுகளாக நாங்கள் ஊழியர்களை வெகுவாக பணியமர்த்தியுள்ளோம் என்றார் ஜாஸ்ஸி.

இதற்கிடையில், அமேசான் இன்க் இ-கொமர்ஸ் நிறுவனத்திற்கு 8 பில்லியன் டொலர் கடனை வழங்க சில கடன் வழங்குநர்களுடன் ஒரு உடன்பாட்டை எட்டியுள்ளதாக அமேசான் தெரிவித்துள்ளது. இந்த கடனானது 364 நாட்களில் முதிர்ச்சியடையும், இது மேலும் 364 நாட்களுக்கு நீட்டிக்க வாய்ப்பு உள்ளது என்றும் இந்த நிதியானது நிறுவனத்தின் பொது நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் என்றார். பணவீக்கம் வணிகங்களையும் நுகர்வோரையும் செலவைக் குறைக்க கட்டாயப்படுத்தியுள்ளது.

அமேசான் மட்டுமல்லாமல் சேல்ஸ்ஃபோர்ஸ் நிறுவனம் கூட தங்களின் ஊழியர்களில் சுமார் 10 சதவீதத்தை பணிநீக்கம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும், அதிக அளவில் ஊழியர்களை வேலைக்கு அமர்த்தியதால் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்து வருவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.




# உக்ரைன் – ரஷ்யா : 36 மணி நேர போர் நிறுத்தம்

கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி உக்ரைனில் 36 மணி நேரத்துக்கு போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ரஷ்ய படையினருக்கு ஜனாதிபதி விளாதிமீர் புதின் உத்தரவிட்டுள்ளார். புராதன ஜூலியன் நாள்காட்டியைப் பயன்படுத்தும் ரஷ்யர்கள், ஜனவரி 7 ஆம் திகதியை கிறிஸ்துமஸ் தினமாகக் கொண்டாடுகின்றனர். பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கிரகோரிய நாள்காட்டியை விட அது 13 நாள்கள் பின்தங்கியதாகும்.

முன்னதாக, ரஷ்யாவின் மரபுவழி திருச்சபை தலைமை பாதிரியார் கிரில் இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்திருந்தார். அவர் கூறியதாவது, கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது ரஷ்யாவும் உக்ரைனும் போரை நிறுத்திவைக்க வேண்டும். அதற்காக, உள்ளூர் நேரப்படி வெள்ளிக்கிழமை மதியம் முதல் சனிக்கிழமை நள்ளிரவு வரை 36 மணி நேரத்துக்கு சண்டை நிறுத்தம் மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தை இரு நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

அவரது வேண்டுகோளுக்கு உடனடியாக மறுப்பு தெரிவித்த உக்ரைன், ரஷ்ய தலைமை பாதிரியாரின் இந்த கருத்து உக்ரைனை சிக்கவைப்பதற்கான சதி என்றும், ரஷ்யாவின் பிரசார உத்தி என்றும் விமர்சித்துள்ளது. ஆனால், தலைமைப் பாதிரியாரின் இந்த வேண்டுகோளை அடுத்து போர் நிறுத்தத்தை ஜனாதிபதி புதின் அறிவித்தார்.

எர்டோனுடன் புதின் பேச்சு: துருக்கி ஜனாதிபதி எர்டோகனுடன் தொலைபேசியில் உரையாடிய ரஷ்ய ஜனாதிபதி விளாதிமீர் புதின், போரை நிறுத்துவதற்காக உக்ரைனுடன் பேச்சுவார்த்தை நடத்த தாங்கள் தயாராக இருப்பதாகக் கூறினார். இருந்தாலும், இந்தப் போரில் சில பகுதிகளை தாங்கள் இழந்துவிட்டோம் எனபதை உக்ரைன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அப்போது புதின் கூறினார். தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில், தங்களின் நெருங்கிய அண்டை நாடான உக்ரைன் இணைவது தங்களது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது. எனினும், நேட்டோவில் இணைவதற்கு வெலோதிமீர் ஸெலென்ஸ்கி தலைமையிலான தற்போதைய உக்ரைன் அரசு விருப்பம் தெரிவித்தது. அதையடுத்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், கொசான், ஸபோரிஷியா ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றியது.

அந்தப் பிரதேசங்களில் சில பகுதிகள் இன்னும் உக்ரைன் படையினர் வசம் இருக்கும் நிலையிலும், அவற்றை தங்களுடன் இணைத்துக்கொள்வதாக ரஷ்யா அறிவித்தது. இந்த நிலையில், மேற்கத்திய நாடுகளின் ஆயுத தளபாட உதவியுடன் எதிர் தாக்குதல் நடத்தி முன்னேறி வரும் உக்ரைன் படையினர், கொசான் நகரம் உள்ளிட்ட பகுதிகளை ரஷ்யாவிடமிருந்து மீட்டனர். அதையடுத்து, உக்ரைனின் மின் நிலையங்கள் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்புகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மின்சாரம் மற்றும் குடிநீர் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டு பொது மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.